# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>
## <u>கூட்டப்பொருள்</u>

2020ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 05.02.2020 | 1) இம்மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மாநகராட்சிக்கு உட்பட்ட நகர்புற மற்றும் பெரு வணிக பகுதிகளில் உற்பத்தியாகும் குப்பைகளை நுண் உரக்கிடங்கிற்கு கொண்டு செல்ல 7ம் மற்றும் 8ம் கட்டமாக பெறப்பட்ட 10 எண்ணம் மகேந்திரா பி.எம்.டி வாகனங்கள் மற்றும் 28 எண்ணம் டாடா ஏஸி வாகனங்களை கொண்டு முறையே பொது மக்களிடமிருந்து குப்பைகள் பெறப்படும் பணியினூடே மக்களிடம் திடக்கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் சுற்றுப்புற சூழலை பாதுகாப்பதன் அவசியத்தை உயர்த்திடவும் மேலும் மாநகராட்சியில் அறிவிப்புகளை உடனுக்குடன் தெரியப்படுத்திடவும் மேல் குறிப்பிட்ட 38 எண்ணம் திடக்கழிவு மேலாண்மை வாகனங்களில் speaker & Amplifier பொருத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3,80,000/– (GST 18 % யுடன்) என உத்தேசிக்கப் பட்டுள்ளது. எனவே இப்பணிகளை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப் படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்3/996/2018 | 28) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 2)இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – 14வது மத்திய நிதிக்குழு மானிய நிதி திட்டம் 2019–20 பணியில் தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண்.3 பாரதி நகர் நீச்சல் குளம் ரோடு) பகுதியில் தார்சாலை அமைக்கும் பணிக்காக ரூ. 21,60,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு 27.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 28.01.2020 அன்று திறக்கப்பட்டது.<br><br>1) M/S. Immanuel & Co<br>மதிப்பீட்டை விட 2.78 % குறைவு (ரூ. 18,26,090.00)<br>2) Thiru. I. Jeyaseelan<br>மதிப்பீட்டை விட 4.94 % அதிகம் (ரூ. 19,71,085.00)<br>3) Thiru. P. Jothimani<br>மதிப்பீட்டை விட 2.06 % குறைவு (ரூ. 18,39,580.00)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 2.78% குறைவான தொகை (ரூ. 18,26,090.00) (GST இல்லாமல்) கொடுத்துள்ள M/S. Immanuel & Co என்பவரின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 29) அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு**<br>மதிப்பீட்டை விட 2 .78 % குறைவாக கொடுத்த M/S. Immanuel & Co ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>இ1/3766/2019–1 | |
| | 3) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – 14வது மத்திய நிதிக்குழு மானிய நிதி திட்டம் 2019–20 பணியில் தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண்.6 சக்திவிநாயகர்புரம் 3வது தெரு பகுதியில் தார்சாலை அமைத்து மழைநீர் வடிகால் கட்டும் பணிக்காக ரூ. 24,70,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு 27.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 28.01.2020 அன்று திறக்கப்பட்டது.<br><br>1) Thiru, Jefferson Samuelraj<br>மதிப்பீட்டை விட 0.50 % குறைவு (ரூ. 21,64,136.00)<br>2) Thiru. K. Balakrishnan<br>மதிப்பீட்டை விட 0.19 % குறைவு (ரூ. 21,70,843.50)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.50% குறைவு (ரூ.21,64,136.00) (GST இல்லாமல்) கொடுத்துள்ள Thiru, Jefferson Samuelraj என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>1) மதிப்பீட்டை விட 0 .50 % குறைவாக கொடுத்த Thiru, Jefferso Samuelraj ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>இ1/3766/2019–1 | 30) அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| | 4)தூத்துக்குடி மாநகராட்சியில் பாதாளச்சாக்கடைத் திட்டம் செயல்படுத்திட அரசாணை எண் (டி) எண்.448 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.11.2011ன் படி நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டது. மேற்படி உத்திரவினைத் தொடர்ந்து தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவன கடிதத்தின் படி கீழ்க்கண்டவாறு கடன் மற்றும் மான்ய தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது. | 31) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண். | விபரம் | அனுமதிக்கப்பட்ட தொகை (கோடியில்) | வரப்பெற்ற தொகை (கோடியில்) | த.கு.வ. வாரியத்திற்கு வழங்கப்பட்ட செலவினத்தொகை (கோடியில்) | அனுமதிக்கப்பட்ட தொகையில் வரவேண்டிய தொகை (கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1 | கடன் (TNUDP) | **24.46** | **22.50** | **22.50** | **1.96** |
| 2 | மான்யம் (TNUDP III) | **43.58** | **28.84** | **28.84** | **4.74** |
| | மேற்படி அனுமதிக்கப்பட்ட தொகையில் மேற்படி திட்டப் பணிகள் நடைபெற்று வந்த நிலையில் பாதாளச் சாக்கடைத்திட்டத்தின் பிரதான பணியான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மாநகராட்சிக்கு சொந்தமான புல்தோட்டம் பகுதியில் அமைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டது. இந்நிலையில் 2009ம் ஆம் ஆண்டில் மேற்படி பகுதிவாழ் மக்கள் தெரிவித்த அட்சேபணையின் காரணமாக மேற்படி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான மாற்று இடம் தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான தருவைக்குளம் உரக்கிடங்கு பகுதியில் தேர்வு செய்யப்பட்டது. மேற்படி இடத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க DBFOT முறையில் OMG & Wabag நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்ட நிலையில் ஆரம்பக்கட்ட பணி மட்டும் நடைபெற்று அதன்பின் பணியில் தொடர் நடவடிக்கை ஏதும் இல்லாமல் இருந்ததால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தத்தை இம்மாநகராட்சி கடித எண். இ3/11512/2007 27.07.2016ன் படி ரத்து செய்யப்பட்டது. மேலும் மான்யமாக அனுமதிக்கப்பட்ட ரூ. 43.58 கோடியில் Puplic Private Partnership மூலம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் செயல் படுத்தப்படுவதால் ரூ 10.00 கோடியை மான்ய நிதியில் ரத்து செய்து ரூ. 33.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் இதுநாள் வரை 28.54 கோடி மட்டுமே வரப்பெற்றுள்ளது. தற்போது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமானது ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளில் கழிவுநீர்க் குழாய் பதிக்கும் பணிகள் 97% சதவீதமும் மனிதகுழி மூடி அமைக்கும் பணிகள் 99% சதவீதமும் வீட்டிணைப்பு குழாய் அமைக்கும் பணிகள் 95% சதவீதமும் சாலை சீரமைப்பு பணிகள் 96% சதவீதமும் முடிவுற்றுள்ளது. இதுவரை மேற்கண்ட திட்டப் பணிக்கு மேற்கொள்ளப்பட்ட செலவீனம் ரூ. 81.60 கோடி ஆகும்.<br>சிப்பம் I ஸ்ரீராம் ஈபிசி. நிறுவனத்தின் மூலம் 31.10.2014 வரை பணிகள் காலதாமதமாகவே நடைபெற்று வந்தது. பின்னர் 22.01.2019 முதல் பணிகள் தாமதமாகவே நடைபெற்று வருகிறது. சிப்பம் II & III 31.12.2007 முதல் தொடங்கப்பட்டு 13.11.2015ல் பணிகள் நடைபெற்றது. காலதாமதத்திற்காக ஒப்பந்தம் 11.12.2015ல் ரத்து செய்யப்பட்டது. ரத்து செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள பணிகளில் மீதமுள்ள வேலைகளுக்கான ஒப்பந்தம் வரப்பெற்று 27.01.2017 அன்று M/S VVV Construction க்கு வழங்கப்பட்டு தற்போது வரை பணிகள் நடைபெற்று | | | | |

| | | |
|---|---|---|
| | முடியும் தருவாயில் உள்ளது. பிரதான குழாய் நீருந்து நிலையத்திலிருந்து தருவைக்குளம் சுத்திகரிப்பு நிலையம் வரை கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிகள் 18.11.2013 ஆரம்பிக்கப்பட்டு 30.09.2019 வரை காலதாமதமாக நடந்த பணிகள் முடிவு பெற்றுள்ளது.<br>தற்போது மேற்படி பணிகள் தொடர்ந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நடைபெற்று வருகின்ற வேலையில் அதற்கான செலவினத்தொகையினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டியுள்ளது. 30.06.2020 வரை கடன் மற்றும் மாமன்ற தொகை பெறும் கால அளவினை நீட்டிப்பு செய்து தரக்கோரி மாமன்ற தீர்மான எண். 203 நாள் 26.11.2019ல் தீர்மானிக்கப்பட்டது. தற்போது மேற்படி திட்ட பணிகள் அனுமதிக்கப்பட்ட கடன் மற்றும் மான்ய தொகை பெறும் காலஅளவிலான 30.09.2020 வரை நீட்டிப்பு செய்து தரக்கோரி தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். இ1/11512/2007. | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.05.02.2020

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி